## வருடப் பிறப்பு விடுதலை

வருடப் பிறப்புக் கொண்டாட்டத்தின் பொருட்டு இந்துசாதனாலயம் சைவப் பிரகாச யந்திரசாலை யென்னுமிவைகளிற் கருமஞ் செய்வோரனைவர்க்கும், சனிக்கிழமை (11- 4- 42)தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை (19- 4- 42) முடிய விடுதலை உதவப்படும். அடுத்த நாளாகிய திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கருமாரம்பமாகும். பின்னர் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி வியாழக்கிழமை தொடக்கம் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வழக்கம் போல் வெளிவரும்.

மனேஜர்

இந்துசாதனாலயம்
9- 4- 42

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு பங்குனிமீ ௨௭ உ வியாழக்கிழமை

## "நண்ணினர்க் கினியா யோலம்."

சுப்பிரமணியப் பெருமானுடன் ஆறு நாட்களாக அருஞ்சமர்செய்த அசுரனாகிய சூரபன்மன், அப்பெருமானை வெல்லுதல் தன்னால் முடியாதெனக்கண்டு, தனக்குஞ் சிவகுமாரனுக்கு மிடையே சமரை மூட்டிவிட்டவர்களாகிய தேவர்களையாகிலுந் தாக்கிப் பிடித்துக் கொன்று நின்று தன் சினந் தீர்க்கத்துணிந்து, தனக்குக் கைவந்துள்ளதாகிய மாயா மந்திரத்தின் வலிமையால் அகிலமெங்குந் தடித்த இருளையுண்டாகச்செய்து தானும் பல்லாயிரந் தலைகளோடும் கரங்களோடும் கூடிய ஒரு பாரிய யாக்கையைக் கொண்டவனாய் அந்தத் தடித்த இருளினிடையே தேவர்களைத் தேடிப் புகுந்தான். அறுமுகக்கடவுளொருவரையன்றி ஏனையோ ரெவரையும் அந்த அந்தகாரம் தன்னுள் ஆழ்த்திவிட்டது. சூரன் செய்யப் புகுந்த மாயத்தை அரிபிரமேந்திராதி தேவர்கள் தங்கள் ஞானத்தினாலும் குறிப்பாலும் ஒருவாறு உணர்ந்து தமக்கு நேரவிருக்கும் பேராபத்தையிட்டுச் சுப்பிரமணியக் கடவுளின் திருமருங்கில் நின்று தத்தம் உச்சிமேற் கரஞ் சேர்த்துப் பின் வருமாறு தோத்திரஞ் செய்யலாயினர்.—

"நண்ணினர்க் கினியா யோலம் ஞானநாயகனே யோலம்
பண்ணவர்க் கிறை யேயோலம் பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம் யாவையும் படைத்தா யோலம்
கண்ணுதற் பெருமா னல்குங் கடவுளே யோலமோலம்.

"தேவர் கடேவே யோலஞ் சிறந்த சிற்பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம் வேற்படை விமலா வோலம்
பாவலர்க் கெளியா யோலம் பன்னிரு புயத்தா யோலம்
மூவருமாகி நின்ற மூர்த்தியே யோலமோலம்."

"கங்குலி னெழுந்த கார்போற் கவினிய யிருள் மறைவினேங்கி
துங்கிய செல்வான் சூரன் ஓடவும் போன்வம யில்லேம்
எங்கினி யுய்வமைய விறையு நீ தாழ்க்கல் கண்டாய்
அங்கவனுயிரை யுண்டெம் ஆவியை யருளு கென்றார்."

"கருணையங்கடலே! எந்தாய்! தேறுமுகமின்றித் தெருமந்த எங்களை ஆறுமுகன் கொண்டு காக்க அவதரித்த பரம்பொருளே! கொடியவனுகிய சூரன் பேரிருளை அண்டமெங்கும் பரவச்செய்து அவ்விருளிடையே கரந்து எங்களைக் கொல்லும் வண்ணம் குறுகினன். காக்கக் கடவிய நீர் காவாதொழிந்தக்கால், ஆர்க்குப் பாரமாம் அறுமுகவா! தேவரீருக்கு அடைக்கலம்! அடைக்கலம்!" என்று அஞ்சி அலறினார்கள்; செவ்வேளை அச்சனயத்து மயூரமாகச் சுமந்துநின்ற புரந்தரனும் "சுவாமீ! எங்களுக்கு நேர்ந்த இன்னலைத் திருவுளத்திலடைத்து இக்கொடிய அசுரனைக் கொன்று எங்கள் பேரிடரைத் தீர்த்தருளவேண்டும்" என்றிரந்தான். இவற்றையெல்லாம் திருச்செவி மடுத்த சண்முகமூர்த்தி புன்னகை பூத்தருளித் தமது திருக்கரத்திலுள்ள ஞானசத்தியாகிய வேற்படையை அந்தச் சூரன்மேற் செலுத்தினாராம்.

வேற்பெருமான், ஆயிரகோடி ஆதவர் ஒருங்குதித்தாலன்ன பேரொளியுடன் அறுமுகக் கடவுளின் திருக்கரத்திலிருந்து புறப்பட்ட மாத்திரத்தே சூரன் ஆக்கிய மாய இருளும் அவன் கொண்ட மாய யாக்கையும் மாய்ந்தன; எங்கும் பேரொளியாய் விளங்கியது; சூரனும் தன்னுடைய சுவய வடிவத்துடன் தன்னந் தனியே யுத்த மூலையில் நின்றான்; அதன்பின் வேற்படை சென்று பின்னர் அச்சூரன் கொண்ட மாமரவடிவை வீழ்த்த, உடனே அவன் தன் சொந்த வடிவத்தோடு முற்பட்டு வேற்படையை எதிர்க்க, அச்சூரனுடைய வச்சிரத்தனி யாக்கையை இரு பிளவாகப் பிளந்துவிட, உடனே அச்சூரபன்மன் சேவலும் மயிலுமாகத் தோன்றி எதிர்த்துவர, முருகவேள் அவைமீது ஞானநோக்கம் பாலித்து மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவுங்கொண்டு அமரர்சிறை மீட்டு அவர்களைப் பாதுகாக்கலாயினர்.

அந்தக் கலியுகவரதனுகிய கந்தசுவாமியைத்தான் நாங்கள் இன்றும் என்றுங் கையெடுத்து வருகிறோம்; ஆனதால் பகைவர் ஆகாயமார்க்கமாக வரிலென்ன? தரைமார்க்கமாக வரிலென்ன? கடல் மார்க்கமாக வரிலென்ன? கலியுகவரதனுகிய கந்தன் எங்களைக் கைவிடமாட்டான். நாம் அவனை வணங்கித் துதித்துக் கொண்டு அந்த முருகனையே தஞ்சமாகக் கொள்வோமாக.

## புதிய வருடம்

சித்திரபானிற் சிறக்க மழை மிகுந்து
வித்துள்ள வெல்லாம் விளையுமே எத்திசையும்
பார்ப்பாருக் காகாது பார்வேந்தர்க்கே வெமாம்
தீர்ப்பாகப் பூமியஞ் செப்பு

"இவ்வருஷத்தில் முன்மழை சமமும், பின்மழை அதிகமும், பனி குளிர்காற்று மிகுதியும், ஒற்றுமைக் குறைவும், உணவுப்பொருள் விலையேற்றமும், தாழ்ந்த சாதியாருக்கு அதிகாரமும், உயர்ந்த சாதியாருக்குத் தாழ்வும், ஆண் குழந்தைகள் விருத்தியாதலும், அடிமைகளுக்குத் தொழிற்குறைவும், கைத்தொழில் விருத்தியும், திருடர் துர்த்தர்களாற் பீடையும் செல்வர்களுக்கு அச்சமும் உண்டாம்; இச்சுபதிரபானு வருடத்தில் யாவற்றையுஞ் சீர்தூக்கிக்கண்ட நற்பலன் எண்குபங்கும் தீப்பலன் ஐந்து பங்குமாகும்" என்று புதிய வருடப பலன் பஞ்சாங்கத்தில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. குறித்த வருடம் வாக்கிய பஞ்சாங்கங்களின்படி வருகிற திங்கட்கிழமை (13-4-42) பிற்பகல் 3 மணி 10 நிமிஷ வேளையிற் பிறக்கிறது. வாக்கியகாரர் அதினத்தையே வருடப்பிறப்புத்தினமாகவும் சித்திரைமாச முதற்றேதியாகவும் கொண்டுள்ளார்கள்; திருக்கணிதப்படி குறித்த திங்கட்கிழமை இரவு 8 மணி 9 நிமிஷ வேளையிற் பிறக்கின்றது. வருடப்பிறப்புக் கருமங்கள் அதற்குரிய புண்ணியகாலத்திலேயே செய்யப்படல் வேண்டும்; சூரிய பொங்கல் விஷயத்தில் வாக்கியகாரர் திங்கட்கிழமையையும் திருக்கணிதகாரர் செவ்வாய்க்கிழமையையும் முறையே பொங்கலுக்குரிய தினமாகக் குறித்திருக்கின்றனர். திருக்கணிதகாரரும் இலங்கை அரசினரும் செவ்வாய்க்கிழமையையே வருடப்பிறப்புத் தினமாகவும் செல்வ தமிழ் வருடப்பிறப்பு விடுதலைத் தினமாகவும் முறையே நியமித்துள்ளனர். அவரவர் தாம் தாம் கைக்கொள்ளும் பஞ்சாங்கங்களின்படி புதுவருடப்பிறப்புத் தினத்தைக் கைக்கொண்டொழுகவேயொழிய இந்த விஷயமாக இச்சந்தர்ப்பத்தில் யாம் ஏதும் சொல்லுதற்கில்லையாம். நிற்க,

எந்தச் சாதியார்க்கும் எந்தச் சமயத்தினர்க்கும் எந்த நாட்டிலார்க்கும் தத்தம் வருடப்பிறப்பு ஒரு புண்ணியமான கொண்டாட்ட தினமாகும். சைவ நன்மக்களாகிய எங்களுக்குப் புதுவருடப்பிறப்புத் தினம் விரதமனுட்டித்தற்கும் தெய்வத்தை வழிபடுதற்கும் பொங்கல் முதலிய சத்கிரியைகளைச்செய்தற்கும் தானதருமம் வழங்குதற்கும் பெரியோரை வழிபடுதற்கும் தத்தம் கருமங்களை ஆரம்பித்தற்கும் இனைய பிற நன்மைகளில் முயலுதற்கும் வாய்த்த தினமாகும். எக்கருமத்தைச் செய்யத் தொடங்கும்போதும் தெய்வத்தை வழுத்திச் செய்தல் வேண்டுமென்பது முறை. இப்புண்ணிய தினத்திலே தத்தம் குலதெய்வத்தை வழிபடும் விஷயத்தில் எவரும் சோர்வடையலாகாது. இந்த வருடாரம்பத்தில் எங்களைப் பிடித்துள்ள தீமைகளெல்லாம் விரைவில் அகலவேண்டுமென மனதாரத் தெய்வத்தைப் பிரார்த்தித்தல் வேண்டும்.

"அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த தொல்லைபோம்"

என்ற பிரகாரம் இறைவனை வேண்டின் அவன்திருவருளால் இடரனைத்தும் நீங்கு மென்பது திண்ணம். சூரிய பொங்கல் முதலாம் சத்கருமங்களையும் தவறுமற் செய்தல் வேண்டும். சைவமக்களாயுள்ளாரெல்லாரும் சிறந்த புண்ணிய தினமாகிய புதுவருடத்தன்று துப்பசிக்கையினராய் ஆசாரசீலராய் மேலே சொல்லப்பட்ட சத்கருமங்களையெல்லாம் பத்திபூர்வமாகச் செய்து இறைவனருளால் தமக்குள்ள இன்னலெல்லாம் அறவே நீங்கி இனிது வாழ்வாராக.

## மூடியகடைகளைத் திறக்க ஏற்பாடு

### சிவில் பாதுகாப்புக் கமிஷனரின் அவசர நடவடிக்கை

கொழும்பில் சில கடைகளை தாமாகவே திறந்து வியாபாரம் செய்ய அக்கடை முதலாளிகள் முன்வர மறுத்தால் அக்கடைகளில் குமாஸ்தாக்களைக் கொண்டு வியாபாரம் செய்ய சிவில் பாதுகாப்புக் கமிஷனர் ஏற்பாடு செய்திருப்பதாக அவருடைய காரியாலயத்தில் நேற்று நடந்த ஓர் பத்திரிகா நிருபர்கள் மகாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

"நீங்கள் கடையைத் திறந்து விற்பனை செய்யாவிட்டால், நாங்கள் உங்களுக்காக விற்பனை செய்வோம்" என்று கடைமுதலாளிகளுக்கு கூறப்படுகிறது. இவ்வாறு சொல்லியும் திறக்கப்படாத கடைகளை குமாஸ்தாக்கள் தாமே எடுத்துக்கொண்டு விற்பனை செய்கிறார்கள்.

இவ்வாறு முதலாவதாக டீல்ஸ் ரோட்டிலுள்ள ஓர் கடை திறக்கப்பட்டது. குமாஸ்தாக்கள் சென்று அக்கடையைத் திறக்க முயற்சி செய்துகொண்டிருக்கையில் முதலாளி தானுகவே வந்து அக்கடையைத் திறந்து விற்பனை நடப்பதைக் கவனித்து அங்கு குமாஸ்தாக்கள் நியமிக்கப்பட்டனர். இம்மாதிரியாக நகரில் அநேக கடைகள் திறக்கப்பட்டு திங்கட்கிழமை இரவு 10 மணிவரை வியாபாரம் செய்யப்பட்டது. தேசாதிபதியும் சிவில் பாதுகாப்புக் கமிஷனரும் இக்கடைகளுக்கு விஜயம் செய்தார்கள்.

சாப்பாட்டுக் கடைகளையும் திறக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. போதிய வேலையாட்களை இல்லாத கடைகளுக்கு சாரணரின் உதவி பெறுவதற்காக ஓர் பிரத்தியேக உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இம்மாதிரியாக பெயிலி தெருவிலும் செட்டியார் தெருவிலுமுள்ள சாப்பாட்டுக்கடைகள் பல திறக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் மற்றக் கடைகளும் திறக்கப்படும்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# உலகம் பலவிதக் கதை

முற்றொடர்

### "பொருடனைப் போற்றிவாழ்"

சிதம்பரப்பிள்ளை ஒருநாள் ஆழ்ந்த சிந்தனையோடு கூடியவராய் இருக்குஞ் சமையத்திற் சிவகாமித்தாய் அவர் முன்னிலையில் வந்து நின்றாள்; அவள் வந்து நிற்பதையும் அவர் பார்த்தாரல்லர்; ஏதோ பணவிஷயமாகத்தான் தன் கணவர் யோசிக்கின்றாரென்று அவள் யூகித்து உணர்ந்து கொண்டு "என்ன, நீங்கள், கடலிலே கப்பலைச் சாக்கொடு மூழ்கக் கொடுத்தவன் போல் பெரிய யோசனையில் ஆழ்ந்திக் கிடக்கிறீர்கள்; நான் வந்து நிற்பதும் உங்கள் கண்ணுக்குப் புலப்படவில்லையெனத் தெரிகிறது; பணம் பண்டம் இல்லாதவர்களுக்கும் கவலை, உள்ளவர்களுக்குங் கவலையென்றால் இதற்கு முடிவென்ன" என்று புன்னகையோடு கேட்டாள் மனைவி. கேட்டவுடனே திடுக்கிட்டுக் கணவன் "சிச்சி, எனக்கென்ன யோசினை, நீ இருக்கிற வரையில் நான் ஏதற்கும் யோசிக்க வேண்டியதில்லையே" என்று சிரித்துக் கொண்டு சொன்னார். "நான் இருக்கிற வரையில் நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டியதில்லை யென்பது எனக்கும் தெரியும்; ஆனால் பணமிருக்கும் வரைக்கும் கவலையும் சிந்தனையும் உங்களை விட்டுப் போக மாட்டா என்பது எனக்குத் தெரியுந்தானே" என்றாள் சிவகாமித் தாய். "பின்னே, என்ன. உன்னைப் போல, பணத்தைப் பற்றிப் பொருள் பண்டத்தைப் பற்றிச் சிறிதுங் கவலையில்லாமற் பராமுகமாயிருக்கும்படியா எனக்குச் சொல்லுகிறாய்; பொருடனைப் போற்றிவாழ் என்று ஔவையார் சொன்னதை அயர்த்து விட்டாயா? பொருளைப் பேணி நடக்தாற்றானே அந்தப் பொருளும் நம்முடன் இருக்கும்; கடன் கொடுத்தால் எவ்வளவு கொடுத்திருக்கிறோம், கொடுத்த பணத்துக்கு வட்டி யென்ன வரும், தவணை தப்பிய கடன்களுண்டோ, உண்டானால் அவைகளை அறவிடுதற்குச் செய்ய வேண்டிய வழியென்ன; வைத்த ஈடு வட்டியுஞ் சேர்ந்து பெறுமோ பெறாதோ, என்று இவைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமா" என்று பணத்தின் மகத்துவத்தைப் பற்றி ஒரு சிறிய சொற்பொழிவு நிகழ்த்திவிட்டுப் பெருமூச்சு விட்டார். "நீங்கள் சொல்வதை நான் தலைமேற் கொள்ளுகிறேன்; அதற்குத் தடையில்லை; ஆனால், நீங்கள் காணி பூமியை பொன்நகை வெள்ளி நகைகளை ஈடாகப் பிடிக்கும் போது கணக்குப் பார்த்துக் கொடுக்கும் பணத்திற்குப் பதினெட்டு வீதம் வட்டி சேர்த்து எட்டு வருடம் பத்து வருடத்திற்குப் பிறகு முதலையும் வட்டியையும் கூட்டிப் பார்த்தாலும் அந்தக் காணியின் பெறுமதி நகையின் விலைக்குப்பாதிக்கும், வருமதியான பணம் அதிகப்படாதே; அப்படி யிருக்க உங்களுக்கேன் கவலை" என்று புன்சிரிப்போடு சொன்னாள் சிவகாமித்தாய். "நீ சொல்வது மெய்தான்; நான் ஏமாந்து போக மாட்டேன்; என்றாலும் இரண்டொருகடன் பிடித்த ஈடும் வரவேண்டிய வட்டியும் முதலும் 'மட்டுமட்டா'ய் வந்துவிடும்போலிருக்கிறது; அதையிட்டுத் தான் இப்பொழுது யோசித்துக் கொண்டிருந்தேன்; அதற்கிடையில் நீயும் வந்து சேர்ந்தாய்" என்றார் சிதம்பரப்பிள்ளை; "எந்தக் கடனென்று எனக்குச் சொல்லவொண்ணாதோ" என்று கேட்டாள் மனைவி; "அது நீயும் அறிந்த கடன்தான்; அந்தச் சின்னையாவின் கைம்பெண் சின்னம்மாளின் ஈடு இருக்கிறதே; அந்தக் காணி நான் கடன் கொடுத்த காலத்திற் பெறுமதியானது; இப்பொழுது காணி பூமிக்கு நாளுக்கு நாள் விலை குறைந்து கொண்டு போகிறது; இன்னும் இரண்டு மூன்று வருடகாலத்திற்கு அவர்கள் அந்தக் காணியை மீட்கா விட்டால் காணியும் நான் கொடுத்த பணத்தின் வட்டியும் முதலும் மட்டுமட்டாய் வந்துவிடும்; அதன் மேலும் ஒரு ஆறுமாசம் கழிந்தால் என்பணம் கைப்பொறுப்பாய்த் தான் முடியும்; அல்லாமலும் குடியிருக்கும் நிலம், ஏலம் போட்டு விற்கும் நேரத்திலும் அயலட்டத்திலுள்ளோர் விலைகொடுத்து வாங்க முற்பட்டு வரமாட்டார்கள்; பிறகு யாரவர்களும் என்னைத்தான் குறை சொல்லுவார்கள்; என்னிடத்திற் கொஞ்சக் காசு பண முண்டென்று எத்தனை பேருக்குப் பொறாமை யென்பது, நீ பெண்ணாய்ப் பிறந்தவள், உனக்குத் தெரியாது...." என்று புருஷன் சொல்லுதற் கிடையில் மனைவி சிரித்தாள்; "எனடியப்பா சிரிக்கிறாய், உனக்கு எந்த நேரம் பார்த்தாலுஞ் சிரிப்புத்தான்" என்றார் சிதம்பரப்பிள்ளை; "சிரிக்காமல் எந்த நேரமும் அழுது கொண்டிருக்கச் சொல்லுகிறீர்களா? எனக்குச் சிரிப்பு வந்தது வேறொன்றுக்குமல்ல, நீ பெண்ணாய்ப் பிறந்தவள் என்று சற்று முன்பு சொன்னீர்களே; நீங்கள் சொன்னவிதத்தில், நான் என்னை இவ்வளவு காலமும் ஆணாய்ப் பிறந்தவ னென்று மதித்திருக்கிறேன் என நீங்கள் நினைத்துச் சொல்வதுபோல் இருந்தது" என்று பின்னரும் சிரித்தபடியே சொன்னாள்; "உனக்கென்ன, சிமாட்டி; எல்லாம் வேடிக்கையாகத்தான் உனக்கு இப்பொழுது தோற்றும்" என்று கவலையோடு சொல்லி விட்டுப் பின்னரும் அவர் அவளைப் பார்த்து "இப்படி யெல்லாம் இருப்பதால், சின்னம்மாவின் கடனைக் கூடிய சீக்கிரத்திலே தீர்த்து ஈட்டை மீட்கும்படி நெருக்க வேண்டும்" என்று கவலையோடு சொன்னார்.

### "குருவிக் கூட்டிலே கல்லெறியாதீர்கள்"

தன்னுயகன் சொல்லியவற்றையெல்லாங் கேட்டுக் கவலையடைந்தாள் சிவகாமித்தாய்; "ஐயோ, தெய்வமே இந்த மனுஷனிடத்திலுள்ள உலோபக் குணத்தை மாற்றுவதற்கு அருள் செய்யக் கூடாதா" என்று தன் மனத்துள் தெய்வத்தை நேர்ந்தாள். அவள் பின்னரும் தன் கணவனை விநயத்தோடு பார்த்து "இங்கே பாருங்கள்; அந்த ஒரு கடனை மாத்திரம் இப்போதைக்கு நெருக்காமல் விடுங்கள்; அதையிட்டு யோசியாதிருங்கள்; உங்களுக்கு அது ஒரு பெருந்தொகையல்ல; இந்த நேரத்தில் அந்த ஏழையைக் கடன்தீர் என்று சொன்னால், பாவம்! கைம்பெண்டாட்டி என்ன செய்வாள்? அந்தப் பெண் தன் பிள்ளைகளை வளர்க்கப் படும்பாடு கொஞ்சமல்ல; அந்தப் பிள்ளைகள் இப்பொழுது தான் படிக்கிறார்கள்; அவர்களுள் மூத்த பிள்ளை ஒரு விவேகியாம்; படிப்பிலே கெட்டிக்காரனும்; எங்கள் தம்பிக்கும் படிப்பிலே உதவி பண்ணுகிறவனும்; அந்தப் பிள்ளை தலைப்பட்டு ஏதும் ஒரு தொழில் பார்க்கத் தொடங்கினால் உங்கள் கடனைத் தீர்த்துவிடும்; ஆனதால் அதை இப்போதாகச் சொல்லி நெருக்காதீர்கள்; குருடனைப் பார்த்து இராசவிழி விழிக்கச் சொன்னால் அவனால் முடியுமோ? உந்தக் கடன்பணம் வந்து ஏதோ நிறையப் போவதுமில்லை; வாராமையால் ஏதுங் குறையப் போவதுமில்லை; அற்ப பணத்திற்காக வழக்குத்தொடர்ந்து கடனைச் "சித்தாரித்து" ஏழைகள் குடியிருக்கும் வீடுவளவை நடுக்கட்டி ஏலத்தில் விற்றால் ஊரெல்லாம் உங்களைத் திட்டும்; உள்ள நான் முழுவதும் உங்கள் குடும்பத்திற்குத் தீராவசையாய் முடியும்; அல்லாமலும் நாளைக்கு உங்கள் மக்களை ஒரு கரை சேர்க்கவும் முடியாது; உங்கள் செல்வத்தைக் கன்மச் சொத்து என்று சொல்லி எல்லாரும் வெறுப்பார்கள்; அல்லாமலும் நாளைக்கு நீங்கள் அந்த வீட்டையும் வளவையும் விற்க, உங்களைப் போல வசதியுள்ள இன்னுமொரு உலோபி பணங் கொடுத்து வாங்கினவுடன் அந்த மனுஷியையும் பிள்ளைகளையும் குடியெழுப்பி விட, ஐயோ! பாவம்!! பாவப்படும் வயசுள்ள பிள்ளைகளும் அந்த மனுஷிக்குண்டு; அவளும் பிள்ளைகளும் போய் ஒதுங்க இடமில்லாமல் நடுச்சந்தியில் நின்றால் உலகம் உங்களை என்ன சொல்லும்? அப்படியான நேரத்தில் அந்த ஏழைகள் விடுங் கண்ணீர் ஆறாய்ப் போய்த் தாக்கும் என்று எண்ணுகிறீர்கள்? குருவிக் கூட்டிலே கல்லெறியாதீர்கள்; ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி உறைமோர் என்ற விதமாக உங்களிடத்திலேயுள்ள பணம் முழுவதற்கும் அந்தக் கன்மச் சொத்தே உறைமோராய் முடியும். ஆனதால் உந்தப் பொல்லாத நோக்கத்தை விட்டு விடுங்கள்; எங்கள் பிள்ளைகளுக்கு வினை தேடாதீர்கள்; பிற சந்ததிக்குக் கேடு சூழாதீர்கள்; ஏதோ நீங்கள் செய்த அற்ப புண்ணியத்தினால் போலும் ஆண்டவன் உங்களிடத்திற் சொற்ப பணத்தைத் தந்தான்; நீங்கள் அந்தப் பணத்தை நல்ல வழியிற் செலவிட்டால் இன்னுஞ் சில காலைக்கு நிலை நிற்க விடுவான்; அதற்கு மாறாக நடந்தீர்களோ உடனே வாங்கி விடுவான்; தந்தவன் வாங்கினால் ஏன் வாங்கினாய் என்று யாருங் கேட்க முடியுமா? அந்த ஈட்டுப் பணத்தை மீட்டுப் பெறவேணுமானால், நான் ஒன்று சொல்லுகிறேன், அப்படிச் செய்யுங்கள், என் சீதன வளவுகளில் ஒரு வளவை ஈடாக எழுதிக் கொண்டு எனக்குப் பணந்தாருங்கள்; அந்தப் பணத்தை நான் அந்த ஏழைகளின் பொருட்டு உங்களுக்குத் திருப்பித் தருகிறேன்; பற்றுச் சீட்டுப் பிறப்பித்து அவர்களுடைய காணியை ஈட்டிலிருந்து மீட்டுவிடுங்கள்" என்று கண்களில் நீர்ததும்பச் சிவகாமித்தாய் ஆத்திரத்தோடு கடுகடுத்துச்சொன்னாள்; தாம் கல்யாணஞ் செய்த நாள் தொட்டு அன்றுவரையில்தம்மனைவி அப்படிப் பேசியதைச் சிதம்பரப்பிள்ளை கேட்டறியாராதலினால், மனைவி சொன்ன சொற்களைக் கேட்டவுடனே பயந்துவிட்டார். பயப்படாமல் முடியுமா? அந்தத் தில்லைச் சிதம்பரநாதனே எங்கள் சிவகாமித்தாய் பார்க்கப் பார்க்கப் பார்த்தபக்கமெல்லாம் கூத்தாடுவாரென்றால் இந்தச் சிதம்பரப்பிள்ளை தம்மனைவியாகிய சிவகாமித் தாய்க்குப் பயப்படாமல், இவள் கேட்டபடி செய்யாமலிருக்க முடியுமா? "எடியப்பா, நான் தெரியாமற் சொல்லிவிட்டேன்; உன்மேலாணை இனிமேல் உன் சின்னம்மா வின் கடனைப்பற்றி நான் ஏதும் பேசினாற்கேள் என்று சிதம்பரப்பிள்ளை அழுத்திச் சொன்னார். நான் உங்களுக்குத் தீராவசையும் பழியும் நேருமென்று பயந்து உங்கள் நன்மையையிட்டுத்தான் சொன்னேன். என்னை மறந்தும் ஏதோ சொல்லிவிட்டேன் போலிருக்கிறது. அதைப் பொறுத்துக்கொள்ளுங்கள். நான் பிழைசெய்தால் நீங்கள் பொறுக்கவேண்டும், நீங்கள் பிழைசெய்தால் நான் பொறுக்கவேண்டும்" என்று மனையாள் இதமாகச் சமாதானஞ்சொல்லிப் புன் சிரிப்புடன் தன்னுயகனுடைய கன்னத்தைத் தடவினாள். சிதம்பரப்பிள்ளைக்கு உள்ளங் குளிர்ந்தது சிதம்பரப்பிள்ளை அந்தக் கடனைப்பற்றி நெருக்கமாட்டேனென்று சொன்னதும் மனப்பூர்வமானதல்ல; தாம் மறுத்து நின்றால் தன் மனைவி சொன்னபடி செய்துவிடுவாள்; பிள்ளைகளும் தாய்பக்கமாகவே நிற்பர்; குடும்பத்திலே பிணக்கு நேரும் என்ற அச்சத்தினால் தான் அதற்கு உடன்பட்டார்.

### நாங்கள் செய்த குற்றமென்ன?

இவ்வாறு சிலகாலஞ் செல்ல கமலேசுவரி மங்கைப் பருவமடைந்தாள்; அதனால் தன் பிள்ளையைப் பள்ளிக்கூடத்திற்கு நடந்துபோக விடுதல் சரியல்ல என்றெண்ணிச் சின்னம்மாள் கமலேசுவரியைப் பள்ளிக்கூடத்திற்குப் போகா வண்ணந் தடுத்து விட்டாள்; அவளுடைய மற்றைப் பிள்ளைகளே பாடசாலைக்குப் போய் வருவாராயினர். கமலேசுவரி பாடசாலைக்கு வாராததை அவதானித்தசுந்தரேசுவரன் அவள் ஏன் வருவதில்லையென்பதை விசாரித்துக் குமாரசாமியைக் கேட்டறியக் கூசியவனாய்த் தன் சகோதரியாகிய சுந்தரேசுவரியைப் புவனேசுவரியிடங் கேட்டறியச் சொன்னான்; சுந்தரேசுவரி புவனேசுவரியைக் கேட்டபோது, அவள் விஷயத்தை இவளுக்குச் சொல்ல இவள் தமயனுக்குச் சொன்னாள். அதனைக் கேட்ட சுந்தரேசுவரன், படிக்கக் கூடிய பிள்ளையாயிருந்தும் படிக்கப் பிரியமிருந்தும் பள்ளிக்கூடத்திற்குப்போய் வருவதற்கு ரிக்ஷோ முதலிய வண்டி வசதியில்லாமையினாற்றானே கமலேசுவரியின் படிப்பு கெடலாயிற்றென்பதை யிட்டுக் கவலைப்பட்டான். அந்தவிதமாகப் பள்ளிக்கூடத்திற்கு கமலேசுவரி போய் வருவதற்குத் தடையாயுள்ளது அவர்களைப் பிடித்துள்ள தரித்திரமல்லவோ என்று அவன் சிந்தித்தான். கமலேசுவரியைக் காணுமையினால் அவனையறியாமலே அவனுடைய உள்ளத்தில் முன்னில்லாத ஒரு கவலை பிறந்தது. கல்வியிலும் சுந்தரேசுவரனுக்கு ஊக்கம் குன்றியது முகத்திலே அவனிடத்தில இயல்பாகவுள்ளமகிழ்ச்சி மறைந்தது. வழக்கம் போல் ஒரு சனிக்கிழமை பகல் பத்துமணியளவிற் சுந்தரேசுவரன் சின்னம்மாளின் வீட்டிற்குப் போனான். அதற்கு முன்னர்ச் சின்னம்மாள் வீட்டிற்குச் சந்தோஷத்துடன் போய் வந்த சுந்தரேசுவரன் அன்றுபோகும்போது மனதிலேசிறிது அச்சமுங்கூச்சமும் மாறி மாறி நிகழச் சென்றான்; சென்று தான் வழக்கமாகப் போயிருக்கும் உட்பக்கத்திற் போகாது தலைவாசலில் நின்று "கந்தசாமி", என்று மெல்லக் கூப்பிட்டான். அப்பொழுதுதான் எண்ணெய்ப்பட்டு ஸ்நானஞ் செய்துவிட்டு அறையுள் வந்து தன் கூந்தலிலுள்ள ஈரத்தைப் புலர்த்தியபின் தன் நீண்ட கூந்தலைச் சிக்கெடுத்துக் கொண்டு நின்ற கமலேசுவரியின் செவியில் "கந்தசாமி" என்ற அந்த இனிய ஓசை கேட்டது; "உள்ளே உட்காருங்கள்" வந்து விடுவார்கள் என்று மேலோசத்தில் விளங்கும் பூரண சந்திரனை ஒத்த ஒரு சுந்தரமான முகம் புன்சிரிப்பு அரும்ப அறையின் வாசலுக்கு வெளியே சிறிது தோன்றி இனிய குரலுடன் உபசார வார்த்தை கூறிவிட்டு மின்னென மறைந்தது; அக் குரல் இனிமையிலும் சிறிதுமாறுபடாததோடு கூடியதாகத்தான் சுந்தரேசுவரனுடைய காதிற்பட்டது. "அம்மா, அவர் வந்திருக்கிறார் போங்கள" என்ற பின்னரும் அதே இனிய குரல் சுந்தரேசுவரன் காதில் விழுந்தது. "எங்கே, தம்பியை வெகுநாளாக இந்தப் பக்கம் காணவில்லை, எங்களை மறந்து போனாரோ என்று என் பிள்ளைகளுஞ் சொல்லிக் கவலைப்பட்டார்கள்" எனச் சின்னம்மா உபசார வார்த்தைபேச, சுந்தரேசுவரன் "போன சனிக்கிழமை மாத்திரந்தானே நான் வரவில்லை, அல்லாமலும் உங்கள் மக்களுள் ஒரு ஆளைத்தவிர மற்றையவர்களையெல்லாம் நிதமும் காணுகிறேன் தானே" என்று பதில் சொன்னான். "ஓம் தம்பி, எங்கள் பெரிய தங்கச்சியைக் கான தான் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் மறித்துவிட்டேன்; பெரியபிள்ளையான பின்பு தெருவழியே பள்ளிக்கூடத்திற்கு நடந்து போய்வருவது சரியல்ல; என் பிள்ளைக்கு இடையிற் படிப்பைவிடப் பிரியமில்லைதான்; அதற்கென்ன செய்வது, எழுதா விதிக்கு அழுதால் ஆகுமா தம்பி" என்று கவலையோடு சொன்னாள் சின்னம்மா; "போக வர வண்டி வசதியில்லையென்ற காரணத்தைப்பற்றிப் படிப்பை விடவேண்டாம்; என் தங்கைச்சியுடன் சொன்னால், தங்கைச்சி ஒவ்வொரு நாளும் இங்கே வந்து தன் ரிக்ஷோவிலேதானே கூட ஏற்றிக்கொண்டு போய்ப் பின்பும் கொண்டுவந்து விட்டுப் போவாள்; அப்படிச் செய்வது எங்கள் அம்மாவிற்கும் விருப்பமாயிருக்கும்" என்று சொல்லிவிட்டுச் சுந்தரேசுவரன் "எங்கே! மற்றவர்களொருவரையுங் காணவில்லை" என்று சின்னம்மாவைக் கேட்டான்; "தம்பியுந் தமையனும் புத்தகமோ கொப்பியோ வாங்கவென்று சொல்லிக் காசுக்கொண்டு சண்முகநாதன் புத்தகக் கடைக்குப் போய்விட்டார்கள்; புவனம் இப்பொழுதான் வீட்டிற்கு முழுகப் போயிருக்கிறாள்; சின்னப்பிள்ளைகள் இரண்டுபேரும் என்னைத் தேய்த்தபடி நின்று பார்க்கிறார்கள்; கமலம் முழுகிவிட்டுத் தலைதுடைத்துக்கொண்டு நிற்கிறாள்" என்று சொல்வதற்கிடையில் "அம்மா, நான் எல்லாம் முடித்துக் கொண்டு இங்கேதான் நிற்கிறேன்" என்று தலைவாசற் கதவண்டை தன் முகத்தைப் பாதிதோன்ற நின்று கனிவுடன் சொன்னாள் கமலேசுவரி; "கமலம் இப்படி வாடியம்மா, தம்பியை நீங்கள் புறக்கணித்து நடக்கவொண்ணாது. தம்பி எங்களைப் புறக்கணிப்பதில்லை; அந்தத் தங்கைச்சியும் தாயாரும் உங்களோடு அன்பாயல்லவா நடக்கிறார்கள். தம்பியின் தாய்க்கு உங்களிடத்திலுள்ள பற்று, பெற்றதாயான எனக்குத்தானும் இல்லையென்று சொல்லலாம். "நீ இன்னமும் படிக்கவேண்டுமென்று தம்பி ஆசைப்படுகிறார். இவர் அப்படி விரும்பும்போது, படிக்க உனக்கென்ன தடை, இப்படிவந்து தம்பி சொல்வதைக் கேளடியம்மா" என்று சின்னம்மா உண்மையான விசுவாசத்துடன் சொன்னாள். தன் தாய் எந்த நிமிஷம் இப்படிச் சொல்வாளெனக் காத்துநின்ற கமலேசுவரி உடனே அங்கே வராளென்று கூறவும் வேண்டுமா? நீர் நிறைந்து ததும்பிக்கொண்டுநின்ற வாவியின் வெள்ளம் ஒரு புறத்தால் அணையை உடைத்துப் பாய்ந்தலைப் பட்டவாறு, கமலேசுவரி அன்னமென நடந்து தாயின் பக்கத்தே போய் மயிலென ஒதுங்கி நின்று "ஏன் இந்தப் பக்கம் வராமல் விட்டுவிட்டீர்கள்; நாங்கள் உங்களுக்குச் செய்த குற்றமென்ன" என்று குயிலென மொழிந்து தலைகுனிந்து நின்றாள். அவர்கள் வீட்டிற்குப் போனாற் குறைவருமோ என்ற சந்தேகத்துடன் போய்ச் சேர்ந்தவனாகிய சுந்தரேசுவரன் இப்படியான இதமான வார்த்தைகளை கமலேசுவரி இயம்பக் கேட்டானுபின் அவனுடைய உள்ளம் உருகாமலிருக்கமுடி-

தொடர்ச்சி 3 ம் பக்கம்

# இவ்வாரத்திய சிறந்த யுத்தச் செய்தி

## சத்துரு விமானங்களுக்குக் கொழும்பில் பலத்த உதை

## நகரிலும் சுற்றுப் புறத்திலும் 75 விமானங்கள் படையெடுத்துத் தாக்கின

செய்தி வாய்ந்த பிரிட்டிஷ் ராணுவ விமரிசகரான "அனலிஸ்ட்" எழுதுவதாவது:—ஜப்பானிய விமானப்படை 'ஈஸ்டர்' ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பில் தாக்குதல் நடத்திப் பலமாகத் தோற்கடிக்கப்பட்டது என்னுஞ் செய்தியே இவ்வாரத்தில் பிரிட்டிஷ் யுத்தப் பிராந்தியத்திலிருந்து கிடைத்த சிறந்த செய்தியாகும். 25 சத்துரு விமானங்கள் நிச்சயமாக சுட்டு வீழ்த்தப்பட்டன. மற்றும் ஐந்து விமானங்கள் சேதப்படுத்தப்பட்டன. மற்றும் ஐந்து விமானங்கள் நாசமாக்கப்பட்டிருக்கலாம். இவற்றுடன் மற்றும் 25 விமானங்கள் சேதப்படுத்தப்பட்டன. ஜப்பானியருக்கு உண்டுபண்ணப்பட்டிருக்கும் நஷ்டம் உற்சாக மூட்டத்தக்க ஒன்றாக இருக்கிறது.

### லண்டன் பத்திரிகைகளின் வியாக்கியானம்

ஜப்பானிய விமானங்கள் கொழும்பைத் தாக்க முயன்றபொழுது இலங்கை பெற்றுக்கொடுத்த பலத்த அடி இன்று லண்டனில் வெளியான பத்திரிகைகளில் நன்கு வரவேற்கப்படுகிறது.

'டெயிலி டெலிகிராப்' கூறுவதாவது:—

கொழும்பை ஒரே அடியில் தகர்த்து விடும் உத்தேசத்துடன் பிரஸ்தாபத் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. பேர்ள் துறைமுகத்திற்கு உண்டுபண்ணியது போன்ற சேதத்தை உண்டு பண்ணும் உத்தேசம் சத்துருவுக்கு இருந்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் பிரிட்டிஷ் யுத்த விமானங்களும் விமான விழ்த்திப் பீரங்கிகளும், சத்துரு ஆச்சரியப்படத்தக்க விதத்தில் நடவடிக்கை எடுத்துக் கொண்டன எனினும் அதிகமான தாக்குதல்கள் நடைபெறுமென்று எதிர்பார்க்கவேண்டும். ஏனெனில் இலங்கை இந்தியாவைப் பாதுகாப்பதற்கு ஒரு அரணாக இருப்பதோடு படைகளைத் திரட்டி வைத்து ஜப்பானியர் மீது பதில் தாக்குதல் நடத்துவதற்கான பலம் பொருந்திய ஸ்தலமாகவும் இருக்கிறது.'

'டெயிலி மெயில்' கூறுவதாவது:—ஜப்பானிய விமானப்படைப் பிரிவுகளுக்கு இலங்கை பலத்த நஷ்டம் விளைத்துத் திருப்பியனுப்பியிருக்கிறது. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக்கு மிக முக்கியமானதொரு இடம் விழிப்புடன் பூரண ஆயத்தத்துடனும் இருக்கிறதென்னும் செய்தி அதிஉற்சாக மூட்டக்கூடியதாக விருக்கிறது. மூன்று மாதங்களுக்கு முன்னர் இலங்கை விமானத் தாக்குதல்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலைமையிலிருந்தது. அதற்குப் பின்னர் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்தன இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்குள்ள ராணுவ அதிகாரிகள் துரிதமாகவும் சிறப்பாகவும் வேலை செய்திருக்கின்றனர்.

இத்தாக்குதலினால் இந்திய அரசியல் பிரச்சினை தாமதமின்றி சமாசமாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்பது வற்புறுத்தப்படுகிறது.

## இலங்கையில் நடைபெற்ற தாக்குதல் கற்பிக்கும் பாடம்

நியூயார்க், ஏப் 6

நியூயார்க் "டைம்ஸ்" பத்திரிகை இலங்கையில் நடைபெற்ற சத்துரு விமானத் தாக்குதல் பற்றி வியாக்கியானம் செய்கையில் இந்தியப் பிரச்னையைத் தீர்ப்பதின் அவசரத்தையும் அது ஞாபகப்படுத்துவதாயும் சாவகாசமான விவாதத்திற்கும், சிக்கலான பேச்சுவார்த்தைகளுக்கும் இது சமயமல்லவென்பதை இந்தியத் தலைவர்களுக்கு இத்தாக்குதல் பாடம் கற்பித்திருக்க வேண்டுமென்றும் கூறுகிறது. அது மேலும் கூறுவதாவது:

'சத்துரு வாசற்படிக்கு நெருங்கி கதவை பலமாகத் தாக்குகிறான், வீடு இரண்டு பட்டுக் கிடப்பதை அவன் கண்டு கொண்டால் உடனே உள்ளே நுழைந்து விடுவான். அப்பொழுது எல்லா விவாதங்களும் நின்று விட வேண்டியதாகிவிடும். இந்தியாவின் விடுதலைப் பற்றிய நம்பிக்கை ஜப்பானின் புதிய அமைப்பு அலைகளுள் அமிழ்ந்துவிடும்.

## அமெரிக்க தூதர் நேருஜியைச் சந்திக்கிறார்

புதுடெல்லி, ஏப் 6

காங்கிரஸ்தலைவரான ஸ்ரீ அசாத் அவர்களும் பண்டித நேருஜி அவர்களும் ஸ்ரீ ரூஸ்வெல்ட் அவர்களின் பிரதிநிதியான ஸ்ரீ கேணல் லூயி ஜோன்சன் அவர்களோடு இன்று பிற்பகல் 1½ மணித்தியாலம்வரை சம்பாஷித்தனர்.

ஸ்ரீ கேணல் ஜோன்சன் மேற்குறித்த இரு இந்தியதலைவர்களைச் சந்தித்தபின் சேர். கிறிப்ஸ் அவர்களைக் கண்டுபேசினார்.

இந்திய தேசியக் காரியக் கமிட்டி எட்டு மணித்தியாலப் பரிசீலனைக்குப்பின் கிறிப்ஸ் அவர்களுக்கு ஒரு அறிக்கை விட்டிருக்கிறது.

## ஜின்னாவுக்கு விசேஷ அதிகாரம்

### லீக் மகாநாட்டுத்தீர்மானங்கள்

அலகபாத் ஏப்ரல் 6

அகில இந்திய முஸ்லிம் லீக் மகாநாட்டில் ஞாயிற்றுக்கிழமை இரவு மிகப் பிரதானமாகத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன்மூலம் அடுத்த மகாநாடுவரை முஸ்லிம் லீக்கின் லக்ஷியத்திற்கும் கொள்கைகளுக்கும் பொருத்தமானதென்று காணும் போது முஸ்லிம்லீகின் நோக்கத்தை ஈடேறச் செய்வதற்குரிய எல்லாவித மான நடவடிக்கைகளும் எடுக்க ஜனாப் ஜின்னாவுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. தற்போதைய சர்வதேச நிலைமையில் சத்துரு இந்தியாவுக்குக் கைக்கெட்டிய தூரத்திலிருப்பதால் இத்தகைய அதிகாரமளிக்கப்படவேண்டியது மிக அவசியமாகிறதென்று அத்தீர்மானம் கூறுகிறது. இத் தீர்மானத்தின் மூலம், தான் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டதாக அர்த்தம் செய்து கொள்வதற்கில்லையென்றும் யுத்தம் போன்ற நெருக்கடி காலத்தில் சில குறிப்பிட்ட அதிகாரங்களைத் தனக்கு வழங்குவதுதான் இத்தீர்மானத்தின் நோக்கமென்றும் ஜனாப் ஜின்னா கூறினர்.

முஸ்லிம்களின் உயிரையும் உடைமையையும் பாதுகாப்பதற்கு மாகாண லீகுகளுடன் கலந்து ஆலோசித்து தீவிர நடவடிக்கை எடுக்கக்கூடிய கமிட்டியொன்றை நியமிக்க ஜனாப் ஜின்னாவுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸுடன் ஜனாப் ஜின்னா நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் பூர்த்தியாகும்வரை கிரிப்ஸ் திட்டம் சம்பந்தமாக எத்தகைய தீர்மானமும் தயாரிப்பதில்லையென்ற தீர்மானமும் விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

## சென்னை மக்களுக்கு இராஜாஜியின் மணிமொழி

சென்னை ஏப் 6

ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார் சென்னை மகாஜனங்களுக்குப் பின்வரும் செய்தி விடுத்திருக்கிறார்:—

"இதுவரை நான் கூறிய ஜோஸியம் எதும் பலிக்காமல் போகவில்லை.

சென்னை மக்களுக்கு நான் கூறுவதெல்லாம் "பீதியடைந்து விடாதீர்கள்" என்பதேயாகும். கொழும்பு தாக்கப்பட்டதை அறிந்தவுடன் நீங்கள் அச்சம்கொண்டுவிடக் கூடாது. பிரபாதிகளான பொதுமக்களிடையே பீதியை உண்டுபண்ணுவதும், பொதுமக்களின் சாதாரண வாழ்க்கையைச் சீர்குலைப்பதுமே இத்தாக்குதல்களின் முக்கிய நோக்கம். கொழும்பு தாக்கப்பட்ட காரணத்தால் சென்னையின் சாதாரண வாழ்க்கையும்சீர்குலையக்கூடுமானால், சத்துருவின் நோக்கம் அவன் எதிர்பார்த்ததைவிட அதிகமாகக் கைகூடிவிட்டதாக விருக்கும்.

இன்னும் சிறிது காலத்திற்குச் சென்னை தாக்கப்படமாட்டாது. நான் சொல்லுவதை நம்புங்கள். எனது அநுமானம் ஒருவேளை பொய்யாகிவிடக் கூடுமானாலும், உயிர் விடுவதற்குக் கோபப்படும்வரை நீங்கள் தைரியமாகவிருங்கள்.

மேதா அமைதியே மரணத்தையும் ஜப்பானியரையும் எதிர்க்கக்கூடிய சிறந்த ஆயுதமாகும்."

## ஜின்னா 'பாக்கிஸ்தானை' வற்புறுத்துகிறார்

அலகபாத், ஏப் 5

அகில இந்திய 'முஸ்லிம் லீக்' வருடாந்த மகாநாட்டிற்குத் தலைமை வகித்த ஜின்னா தமது தலைமையுரையில் கூறியதின் சில விசேட அம்சங்கள் பின்வருமாறு:-

'ஒரு விஷயத்தை மிகமிகத்தெளிவான வார்த்தைகளால் தெரிவித்துவிட விரும்புகிறேன். எங்கள் இலக்ஷியம் 'பாக்கிஸ்தான்' என்பது உறுதி. சேர். கிறிப்ஸ் கொண்டுவந்திருக்கும் திட்டம் எப்படியாயினும் அது எங்கள் இலக்ஷியமான 'பாக்கிஸ்தானை'ஈட்டிக்கொள்வதற்கு இடைஞ்சலாக விருக்குமானால், ஒருபொழுதும் அதை எங்களால் ஏற்றுக்கொள்ளவே முடியாது.'

ஜின்னா, தமது தலைமையில் முஸ்லிம்கள் தனித்துவாழவேண்டுமென்கிறார். ஏனை இந்தியச் சகோதரர்களினின்றும் பிரிந்திருக்கவேண்டுமாம். இந்தியசமூகம் ஒன்றித்து வாழ விடாதிருக்கும் கொள்கையாகிய 'பாக்கிஸ்தானை' வற்புறுத்துகிறார்.

முஸ்லிம்கள் ஹிந்துக்களால் நசுக்கப்பட்டுவிடுவார்களாம்; கிறிப்ஸ் திட்டம் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்குத் திட்டவட்டமாக வற்புறுத்துகிறதில்லை என்கிறார்.

"இந்தியா முழுதுமொரு நாடாகவோ அல்லது ஒரு வர்க்கத்தாரைக் கொண்டதாகவோ இருந்ததில்லை; இந்தியாவில் பல பிரிவுகளுள. ஒவ்வொரு பிரிவினரும் கலாசாரத் துறையிலும் சமூகப் பழக்க வழக்கத் துறையிலும் அரசியல் துறையிலும் பொருளாதாரத்துறையிலும் மற்றையவரினும் பெரிதும் வேறுபடுவர். இவ்வேற்றுமைகளை மறைக்கவோ, அல்லது ஒன்றோடொன்று கலக்கவோ முடியாது' என்கிறார்.

கிறிப்ஸ் திட்டத்தில் மேலாழ்ந்த வாரியான யோசனைகள் தான் அடங்கியிருக்கின்றனவாம். கிறிப்ஸ் திட்டத்தில் சேர்க்கவேண்டியவை தள்ளவேண்டியவை பல இருக்கின்றனவாம். முஸ்லிம் இந்தியாவின் வாழ்வும் சாவும் 'பாக்கிஸ்தான்' திட்டத்தைப் பொறுத்ததாகும் எனகிறார்.

'பாக்கிஸ்தானை' மற்றவர்கள் தங்களுக்குக் கொடுப்பார்களென்பதல்லவாம்; தாங்கள் 'பாக்கிஸ்தானை'க் கைக்கொள்ளுவார்களாம்.

கிறிப்ஸ் திட்டம் பரிசீலனை பண்ணப்படுகிறதாம். இன்னும் தாங்கள் சரியான முடிவிற்கு வரவில்லையென்றும் சொன்னாராக அறியப்படுகிறது.

## சகசமாஜிகள் நால்வர் தப்பியோடினர்!

ஸ்ரீமான்கள் டக்டர் கொல்வன் டி. சில்வா 'பறிஸ்டர்', டக்டர் என். எம். பெரைரா அரசாங்கசபை அங்கத்தவர், டி. பி. ஆர். குணவர்த்தன அரசாங்கசபை அங்கத்தவர், எட்மன்ட் சமரக்கொடி வழக்கறிஞர் என்ற நால்வரும் கண்டி பறியற்சாலையிலிருந்து நேற்றுக்காலை தப்பியோடினராக அறியப்படுகிறது. மறியற் காவற்காரனும் காணப்படவில்லையென அறியக்கிடக்கின்றது.

ஸ்ரீ சமரக்கொடியவர்கள் 1940-ம் ஆண்டு ஜூன் மாதம் 20ந் திகதி ஜெயிலுக்குச் சென்றார். ஏனைய மூவரும் 1940-ம் ஆண்டு ஜூன் மாதம் 19ந் திகதியன்று ஜெயிலுக்குச் சென்றவர்களாம்.

இன்னும் அவர்கள் எங்கிருக்கிறார்களென அறியப்படவில்லை.

## ஸ்ரீ தஹநாயக கைதியானார்

காலி மாஜி மேயர் ஸ்ரீ தஹநாயக என்பவரும் இலங்கைப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்க் குற்றஞ்சாட்டப்பட்டு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஸ்ரீ பெனுண்டோ எ. எஸ். பி. அவர்களால் கைதியாக்கப்பட்டாரென அறியப்படுகிறது.

## ஒரு வாழையில் மூன்று குலைகள்

சீர்வேலிப் பகுதியிலுள்ள ஒரு வாழைத்தோட்டத்தில், ஒருவாழை மூன்று காய்க்குலைகளை யீன்றதாகவும் அதில் மூன்று வாழைப் பொத்திகளும் காணப்பட்டனவாகவும் அறியப்படுகிறது.

## ஸ்ரீ அசாத்-உவேவல் சம்பாஷணை

புதுடெல்லி ஏப் 4

ஸ்ரீ அசாத் அவர்களும் நேருஜியும் கிறிப்ஸ் அவர்களின் வாசஸ்தலத்திற்கு இன்று மாலை 5-45மணியளவில் சென்றிருந்தார்கள், அங்கிருந்து உவேவல் அவர்களைக் காணப் போயினர். கிறிப்ஸ் தனியாக ஒரு மோட்டாரில் சென்றனராம். அசாத், நேருஜி இருவரும் உவேவல் அவர்களோடு சம்பாஷித்து முடித்த பின் 7 மணியளவில் திரும்பினர். கிறிப்ஸின் வீட்டில் மீண்டு 15 நிமிஷம்வரை தாமதித்தனர். காந்திஜி டெல்லியைவிட்டுப் புறப்படுவதிலிருந்து, கிறிப்ஸ்—காங்கிரஸ் சம்பாஷணை சம்பந்தமாக எதுவும் அபிப்பிராயம் கொள்ளக்கூடாதென்று வற்புறுத்தப்படுகிறது. காந்திஜி அவர்கள் தனது அபிப்பிராயங்களைத்தையும் வெளியிட்டுவிட்டார். கிறிப்ஸ்திட்டம், தங்கள பதில் திட்டம்பற்றி விரிவான முறையில் காங்கிரஸ் காரியக் கமிட்டியாருக்குத் தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீ பி. ஜி. கேரைத் தவிர்ந்த காங்கிரஸ்கமிட்டி அங்கத்தவர்கள் அனைவரும் இன்னும் புது டெல்லியில் தான் இருக்கிறார்கள். காந்திஜியுடன் நடத்தப்பட்ட விவாதம் ஆசாத்-உவேவல் சந்திப்பு என்று வற்றிலிருந்து ஏதும் புதிய விருத்தி நிகழ்ச்சிகள் ஏற்பட்டால் அதைச் சமாளிக்கவே அவர்கள் இங்கிருந்து வருகிறார்கள்.

அசாத் அவர்களைப் பத்திரிகைக்காரர் சிலர் கண்டபொழுது, அவர் எவ்வித அறிக்கையும் வெளியிட மறுத்து விட்டார். ஆனால் ஒரு கேள்விக்கு மறுமொழி சொல்ல உடன்பட்டார்.

உங்களுக்கு நம்பிக்கைதானா? என்று கேட்டபொழுது அவர் "இந்த நிலைமையில் ஜோஸியம் கூறுவிருப்பது கஷ்டம்; ஏனெனில் இச்சமயத்தில் ஆம் அல்லது இல்லை என்று கூற முடியாது" எனச் சொன்னார்.

காந்திஜி வார்தாவுக்குச் செல்கிறார். காங்கிரஸ் தலைவர் தாம் உவேவல் அவர்களோடு நடத்திய சம்பாஷணை பற்றிய அறிக்கையைக் காங்கிரஸ் காரியக்கமிட்டிக்கு நாளை வெளியிடுவாரென அறியப்படுகிறது.

ஸ்ரீ எம். எஸ். அனி என்னும் காங்கிரஸ் அங்கத்தவர் ஒருவர் ஏப்ரல் 8-ந் திகதிவரை அசாம்வங்காளத்தில் அப்புறப்பட்டு வந்தோர்களின் நிலைமையைப் பரிசீலனை பண்ணச் செல்கிறாரென அறியப்படுகிறது.

## விமானத்தாக்குதலுக்குப் பலியானவர்களுக்கு நிவாரணம்

### ரூபா 70000 நன்கொடை

கொழும்பு முதல் விமானத் தாக்குதலுக்குப் பலியானவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் உதவுவதற்காகப் பெதுஜனப் பாதுகாப்புக் கமிஷனரிடம் ரூபா 70000 நன்கொடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

நன்கொடை வழங்கினோர் பின்வருமாறு:—

(1) ஹாக்ஸ் சிறாப் நிதி ரூபா 50000, (2) ஸ்ரீ ஈ. பி. ஏ. பெர்னாண்டோவும் அவர் பாரியாரும் ரூபா 10,000 (3) அசோசியேட்டட் நியூஸ் பேப்பர் சிலோன் ரூ. 5000 (4) ஸ்ரீமான்கள் ஈ. ஜி. ஆதமலி அண்கோ ரூ. 5000.

## கல்கத்தாவில் விமானத் தாக்குதல் எச்சரிக்கை

ஏப்ரல் மாதம் 3-ம் திகதியன்று கல்கத்தாவில் விமானத்தாக்குதல் எச்சரிக்கை ஊதுகுழல் ஊதப்பட்டதென்றும் ஆனால் விமானத் தாக்குதல் ஒன்றும் நடைபெறவில்லையென்றும் வங்காள அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது.

## இன்சொல்

[ஓர் தொண்டன்.]

மானிடராய பிறந்தோர் மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றினாலும் அறம் புரிய வேண்டும். மனத்தினால் செய்யக்கூடிய அறம் கடவுளைத் தியானித்தலும் உற்றிக்கலையுமேயாகும். வாக்கினால் செய்யக்கூடிய அறம் இறைவன் திருநாமத்தையும் புகழையும் செப்புதலும் பிறருக்கு இன்பம் பயவா மொழிகளைக் கூறுதலுமாகும். காயத்தினால் செய்யும் அறம் இறைவனை அர்ச்சித்தலும் இறையடியார்க்கு வலைபுரிதலும் பிறவுயிர்களுக்கு இதம் புரிதலுமாகும். இன்சொல் என்பது நாங்கள் வாக்கினால் புரியக்கூடிய சிறந்த அறங்களில் ஒன்றாகும். பிறருக்கு எவ்வகையானும் துன்பம் பயவாச் சொல்லே இன்சொல்லாகும். இன்சொற்பேசுவது எங்களுக்கு ஒருபொழுதும் கடினமான கடமையல்ல.

"யாவர்க்குமாம் இறைவர்க்கொருபச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரைதானே"

திருமூலநாயனார் இத் திருச்செய்யுளிலே எவருக்கும் இன்னுரை கூறுதல் சாலும் எனத் தெளிவாகக்கூறுகின்றார். எங்கள் உள்ளத்திலே அன்பு கூடக்கூட எங்கள் வாக்கிலும் நாமகள் நீங்காது உறைவாள். நாங்கள் கூறுவனவெல்லாம் நாமகளின் திருவருளினால் அன்பும் அருளும் நிறைந்த உரைகளாகவேயிருக்கும். அவ்வுரைகள் பிறருக்கு இன்பத்தைக் கொடுக்கும். பகைவர்களும் கேட்டு அஞ்சி நமக்கடிமையாவர். அத்தகைய இன்சொல்லைக் கூறுகின்றவர்களுக்கு இயமன் தருமும் அஞ்சுவனென்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் கூறுகின்றார்.

"இயமன் தரும் அஞ்சுவர்
இன்சொலால்"

என்பது அவருடைய வாக்கு.

ஆகவே இன்சொல் பேசுகின்றவர்களுக்கு உலகில் ஒருவகையான துன்பமுமில்லை, இறக்கும்பொழுதும் இயமன் தூதருடைய யாதனையுமில்லை. அவர்களுக்கு சிவகதி திண்ணமாகக் கிடைக்கும்.

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.'

ஒரு மரத்திலே நல்ல கனிவான பழங்களும் இருக்கின்றன, கனியாத காய்களும் இருக்கின்றன, அறிவுள்ளவன் காய்களை விலக்கி அம்மரத்திலுள்ள நித்திப்பான பழங்களையே அருந்துவான். அறிவில்லாதவன் கனிகளின் நலத்தை உணராதவனும் கைப்புடைய காய்களை மென்று அவற்றை வீசிவிடுவானே யொழிய அவற்றினால் ஒருபயனையும் அடையமாட்டான். அதேபோல் எங்கள் வாக்கிலே இன்சொல் நிறைய உளவாயிருக்க நாங்கள் இன்னாத சொற்களைக் கூறுவது மேலே காட்டிய அறிவில்லாதவன் கைப்புள்ள காயைத் தின்னமுயன்று பழங்களின் பயத்தை இழப்பதுபோலாகும் என்று திருவள்ளுவநாயனாருடைய வாக்காலறியக்கிடக்கின்றது.

நமக்கு ஒருவன் வன்சொல் கூறுவானானால் அது நமக்கு வெறுப்பாகவிருக்கும், பிறர் நமக்கு இன்சொலையே கூறவேண்டுமென்று விரும்புகிற நாம் ஏன் பிறருக்கு வன்சொல்லைக் கூறவேண்டும். பிறர் நம்முடன் எவ்வளவுக்குத் துன்பந் தரக்கூடிய வன்சொல்லைக் கூறினும் நாம் அவர்களுடன் இன்சொலையே கூறவேண்டும். அவர்களைத் திருத்தவும் எங்கள் வசமாக்கவும் நாங்கள் கூறும் இன்சொல்லே சிறந்த கருவியாகும்.

மனத்தில், வஞ்சகம் அழுக்காறு முதலிய மாசுடையவர்கள் கூறும் இனிய வார்த்தைகள் உண்மையான இன்சொல் லாகமாட்டா. பின் மனத்திலே மாசு இல்லாதவர்கள் கூறும் வன்சொல் உண்மையான இன்சொல்லாகும். ஆகவே இன்சொல்லை உரைத்துப் பார்ப்பதற்குச் சிறந்த உரைகல் கூறுபவருடைய மனத்தூய்மையே. வெளிச்சத்தை மாத்திரம் மதித்து இன்சொல்லை வன்சொல்லாகவும் வன்சொல்லை இன்சொல்லாகவும் நாம் மயங்கி உணர வொண்ணாது.

மனத் தூய்மையுடன் வாழ்ந்து இறைவனுடைய நாமத்தை நாவினால் உச்சரிப்பதும் இன்சொல் கூறுவதற்கு எங்களுக்குப் பெருந்துணையாக விருக்கும். இவ்வாறாக இன்சொல்லைக் கூறப் பயின்று நாங்களனைவரும் இம்மை யின்பத்தையும் மறுமை இன்பத்தையும் அடைந்து நற்கதியடைவோமாக.

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

யுமா? இதற்கிடையில் சின்னம் 'நான் "தங்கைச்சி அண்ணை வருமளவும் அவருடன் பேசிக்கொண்டு நில் நான் அடுக்களைக்குப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு விரைந்தெழுந்து போனாள்; "நான் செய்த குற்றம், பொறுத்துக்கொள்ள வேண்டும்; உத்த நாற்காலியில் இருந்தாலென்ன" என்று நல்லொவாருமொழியாய் ஆர்வம் பெருகச் சொன்னான் சுந்தரேசுவரன். நீங்கள் இருக்கும்போது உங்கள் முன்னிலையில் நான் இருந்தற்கு இன்னும் பழகவில்லை" என்று புன்முறுவல் பூப்பப் பதில் சொன்னாள் கருணேசுவரி; அதுவும் அப்படியா, சரி, நல்லொவாருநாளும் என் தங்கைச்சியோடு நிக்ஷேபம் கூடிக்கொண்டு போய்ப் படித்தவா உமக்குப் பிரியந்தானே" என்று சுந்தரேசுவரன் அன்புடன் வினவ, "நீங்கள் சொன்னதைச் செய்வதன்றி எனக்கென்று வேறாக ஒரு இஷ்டமிருக்கிறதோ" என்று வியப்பாகச் சொன்னாள் கருணேசுவரி. இப்படி இவர்கள் பேசுஞ்சமையத்திலே புத்தகக் கடைக்குப்போன குமாரசாமியும் தம்பியும் மீண்டு அங்கே வந்தனர்.

—வரும்.

## திருத்திக்கொள்க

சென்ற வியாழக்கிழமை வெளிவந்த உலகம்பலவிதக்கதை இயலில் "தன் வீட்டிற்கு" எனத் தவறாயிருப்பதைத் "தன் வீட்டிற்கு மீண்டான்" எனச் சேர்த்துக்கொள்க.

## முடியகடைகளைத் திறக்க ஏற்பாடு

2-ம் பக்கத் தொடர்ச்சி

உணவுப் பொருள்கள் விற்பனை செய்வதற்காக ஒவ்வொரு முனிசிபல் டிப்போவிலும் புதிதாக இரண்டு குமாஸ்தாக்கள் நியமிக்கப்படுவார்கள். ஏற்கனவே நகரில் சுமார் ஏழு டிப்போக்களில் உணவுப் பொருள் விற்பனை ஆரம்பமாகிவிட்டது. நகரின் மற்ற டிப்போக்களிலும் நேற்றுச் சாயங்காலம் 4-30 மணிமுதல் உணவுப்பொருள் விற்கப்பட்டு வருகிறது. டிப்போக்களில் விற்பனை நடத்துவதற்காக புதிதாக குமாஸ்தாக்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

கோட்டை, தெகிவளை, கொலன்னாவை முதலிய இடங்களில் இம்மாதிரியான டிப்போக்கள் திறப்பதைப்பற்றி யோசிக்க சிவில் பாதுகாப்புக் கமிஷனர் ஸ்தல ஸ்தாபனப் பகுதிக் கமிஷனர் இந்தப் பட்டினசபைகளின் தலைவர்கள்கொண்ட மகாநாடு ஒன்று நேற்று நடைபெற்றது.

## இந்திய இலங்கைப் புகைரதப் போக்குவரவு

கடந்த செவ்வாய்க்கிழமை தலைமன்னாருக்குச் செல்லும்புகைவண்டி தடைப்படுத்தப்பட்டிருந்தது. நேற்று தலைமன்னாருக்குப் புகைவண்டி செல்ல விடுக்கப்பட்டதென அறிகிறோம்.

## காங்கிரஸுக்கு] பிருத்தானிய யுத்தமந்திரிசபையின் பதில்

புதுடெல்லி ஏப் 7

காங்கிரஸ் அறிக்கைக்குப் பிருத்தானிய யுத்தமந்திரி சபையின் பதில் ஸ்ரீ ஆசாத் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதென அறியப்படுகிறது.

கடந்த செவ்வாய்க் கிழமை ஜின்னா, கிறிப்ஸ் அவர்களைச் சந்தித்திருப்பாரென அறிகிறோம்.

பண்டித நேருஜி அவர்கள் ஸ்ரீ ஜோன்ஸ் ஜோன்சன் அவர்களோடு சம்பாஷித்ததை காங்கிரஸ் காரியக் கமிட்டியினர்க்குத்தெரிவித்தாரென பத்திரிகா நிருபர்களுக்கு அசாத் அவர்கள் சொன்னார்.

பண்டித நேருஜி அவர்கள் புது டெல்லியில் ஒரு கூட்டத்தில் இந்தியாவின் ஒற்றுமையின் அவசியத்தையும் பூரண விடுதலையையும் பற்றி வற்புறுத்திப் பேசினாரென அறியப்படுகிறது.

ஹிந்துமகா சபையும் கிறிப்ஸ் திட்டத்தை, காங்கிரஸ் காரரையும் முஸ்லிம்லீக்கையும்சமாதானப்படுத்தல் மாத்திரம் போதாது எனவும், திட்டம் இந்தியாவின் ஒற்றுமையைப் பெருக்குதற்கு போகமான தாக இருக்க வேண்டுமெனவும் வற்புறுத்தவதான ஒரு செய்தியைத் தந்திமூலம் தெரிவித்துள்ளார்களென அறியப்படுகிறது.

## உவேவல், வைஸ்ராய் நேருஜி பாதுகாப்புமந்திரி

அமெரிக்காவின் பல அறிஞர்கள் உவேவலை இந்திய வைஸ்ராயாகவும் நேருஜி அவர்களை இந்தியப் பாதுகாப்பு மந்திரியாகவும் நியமித்தல் நல்லதென யோசனை சொல்கிறார்களென அறியப்படுகிறது.

## தேகவியோகம்

ஸ்ரீமதி. சி. வாலாம்பிகையம்மை

யாழ்ப்பாணம் மணியகாரனாக இற்றைக்கு முப்பது வருடங்கட்குமுன்னர்க் கடமை பார்த்தவராகிய காலஞ்சென்ற S. சின்னையபிள்ளையவர்களின் பாரியாரும், பிரபல வைத்தியராய் விளங்கிய ஸ்ரீமான் இராமப்பிள்ளையாரின் பௌத்திரியும், பிரபல ஆயுர்வேத வைத்தியராயுள்ள திரு. க. சித்றம்பலமவர்களின் தமக்கையாரும், கொழும்பு அருமாவரிப்பகுதியில் உயர்தர உத்தியோகம் வகித்திருக்கும் திரு. P. அமிர்தலிங்கமவர்களின் மாமியாருமாகிய ஸ்ரீமதி வாலாம்பிகையம்மை சென்ற ஞாயிற்றுக்கிழமை (5-4-42) காலை பத்துமணிவரையில், வண்ணார்பண்ணை மேற்கிலுள்ள தமது இல்லத்தில் தம் புத்திரி பௌத்திரிகள் கதற, சகோதரர் மருகர் ஏனைய சுற்றத்தார் அயலவர் புலம்ப, தமது எழுபத்தொலாம் வயதில் இவ்வுலகவாழ்வை யொருவினர். அடுத்தநாள் மத்தியானம் இவருடைய இமக்கிரியைகள், இவரது ஏகபுத்திரி ஸ்ரீமதி பகவதியம்மாவின் கணவனாகிய திரு. அமிர்தலிங்கமவர்களால், பல சனசமூகத்தில் கோம்பயன் மணல் மயானத்திலே சிறப்பாகச் செய்யப்பட்டன. இவரையிழந்து தன்புறும் மகள்முதலாம் உறவினருடன் யாமும் அநுதாபமுறுகின்றேம்,


## விஞ்ஞாபனம்

கொழும்பு முதலிய சில பட்டினங்களிலுள்ள எங்கள் பத்திரிகை அபிமானிகளுட் சிலர், யுத்த பாதுகாப்பின் பொருட்டு அப் பட்டினங்களை விட்டு வேற்றிடத்தில் ஒதுங்கியிருத்தலினாற் போலும், அவர்களுடைய விலாசத்திற்கு அனுப்பப்படும் பத்திரிகைகள் "ஆள் இல்லை" என்னும் குறிப்புடன் மீண்டு இங்கே வரலாயின; அப்படி மீண்டு வரும்போது நாமே மேலதிகமான முத்திரைச் செலவு கட்டி அப்பத்திரிகையை ஏற்க வேண்டிய நிலையிலானோம்; வேற்றிடத்திற்கு மாறிச் சென்றிருக்கும் அபிமானிகள் இப்பொழுது தங்களுக்குரியதாகிய மேல் விலாசத்தைத் தெரிவித்த பின்பே அவர்களுக்குப் பத்திரிகைகள் அனுப்பப் படும்,

மனேஜர்.



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 5 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும், தொங்வாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) மூதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிருப்பர்.

Y164 A. 21-11-41—20-11-42 (தி)

